# ஊடக வெளியீடு

**2024 மே 13**

# யுக்தி: இலங்கையின் பொருளாதார நெருக்கடி மத்தியில் உழைக்கும் மக்களுக்கான ஒரு தளம்

2024 மே 13ஆம் திகதி, ஆராய்ச்சியாளர்கள், செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக அமைப்புகள், தொழிற்சங்கங்கள் மற்றும் சமூகத் தலைவர்கள் ஒன்றிணைந்து **யுக்தி** என்ற தளத்தைத் ஆரம்பித்து **வைத்தனர்**. கொழும்பில் நடைபெற்ற **"உடமைப்பறிப்பில் இருந்து அபிவிருத்தி வரை: கடன் நீதிக்கான இலங்கையின் பாதை,"** என்ற நிகழ்வில், இலங்கையில் உழைக்கும் மக்க**ளின்** ஜனநாயகம் மற்றும் நீதிக்கான இயக்கங்கள் மற்றும் போராட்டங்களை ஆதரிப்பதற்கான பன்மை மன்றமாக **யுக்தி** ஆரம்பிக்கப்பட்டது. இக் கூட்டணி இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் உழைக்கும் மக்களின் அனுபவங்கள், விமர்சனப் பகுப்பாய்வு மற்றும் நவதாராளவாதத்திற்கான மாற்றீடுகள் பற்றிய புரிதலை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது.

தனியார் மற்றும் இருதரப்பு கடனை (வட்டியுடன்) திருப்பிச் செலுத்துவதை இலங்கை 2027 வரை ஒத்திவைத்துள்ளமை **மற்றும்** எதிர்காலத்தில் அதன் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தாமல் இருக்கும் என்று கணிக்கப்பட்டு அது இன்னுமொரு IMF கடுமைத் திட்டத்திற்கு வழிவகுக்கும் **நிலையில்**, **யுக்தி** இலங்கையில் கடன் நீதிக்கான பரந்த இயக்கத்தை உருவாக்க முயல்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தின் பின்னணியில் அரசாங்கத்தின் கடன் மறுசீரமைப்புத் திட்டங்களால் இலங்கையின் பிணியுற்ற அரசியல் பொருளாதாரத்திற்கு எவ்வித குணப்படுத்தலும் **இதனால்** இல்லை என்று வாதிடுகிறது; **இது** உழைக்கும் மக்களின் சமூகப்–பொருளாதார உரிமைகளை மட்டுமே **மேலும்** தாக்கும் அதே வேளை எஞ்சியிருக்கும் சில சொத்துக்கள் மற்றும் வளங்களை ஆளும் **ஆதிக்கசக்திக்கு** மறுபகிர்வு செய்கிறது.

யாழ்ப் பல்கலைக்கழகத்தின் கலாநிதி அ**கி**லன் கதிர்காமர் மற்றும் பொருளாதார நீதிக்கான பெண்ணியக் குழுவின் (FCEJ) மதுலிகா குணவர்தன ஆகியோர் கடன் நெருக்கடியையும், சமூகப்–பொருளாதார நெருக்கடிக்கு முடிவே இல்**லாத நிலையில்** உழைக்கும் மக்கள் **மீதான** அதன் தாக்கத்தை வெளிப்படுத்தினர். சட்டவிரோதக் கடன்களை ஒழிப்பதற்கான குழுவின் (CADTM) கலாநிதி அமாலி வெடகெதர, தனியார் கடனாளிகளுடனான தற்போதைய பேச்சுவார்த்தைகள் ஏன் இலங்கைக்கு பாதகமானவை என்பதையும், இலங்கையின் கடனுக்கான பொதுக் கணக்காய்வு செய்வதன் முக்கியத்துவத்தையும் விளக்கினார். இக் குழு சமூகவி**ஞானிகளின்** சங்கத்தைச் சேர்ந்த பாலசிங்கம் ஸ்கந்தகுமார் தலைமையில் **நடைபெற்றது**.

இலங்கை அரசாங்கம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நெருக்கடிக்கான கொள்கைகள் மற்றும் தீர்வுகள் எவ்வாறு உழைக்கும் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வாகாது என்பதையும் செயற்பாட்டாளர்கள் விளக்கினர். ஊர்காவற்துறை கடற்றொழிலாளர்கள் சார்பில் அன்னலிங்கம் அன்னராசா, வடமாகாணத்தில் சிறிய–அளவிலான மீனவர்கள் படும் துயரங்களை விவரித்தார். கொழும்பு ஏர்பன் லெப் (Urban Lab) நிறுவனர் இரோமி பெரேரா, சமூகப் பாதுகாப்பில் ஏற்பட்டுள்ள சரிவுக்கும் நகர்ப்புற உழைக்கும் ஏழைகளின் நெருக்கடிக்கும் இடையிலான தொடர்பை விளக்கினார். சர்வதேச நாணய நிதியம் விதித்துள்ள நிபந்தனைகளினால் பெருந்தோட்ட சமூகங்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன என்பது குறித்து இளம் ஆய்வாளர்களின் வலையமைப்பின் உறுப்பினர் R. பேபிஷாலினி எடுத்துரைத்தார். நிலச் சீர்திருத்தங்கள் நடைபெற்று வரும் நிலையில், சட்டம் மற்றும் சமூக அறக்கட்டளையின் விதுர பிரபாத் முனசிங்க, அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டுப்பாடுகள் எப்படி கிராமப்புற ஏழைகளின் நல்வாழ்வின் அடிப்படையைத் தகர்க்கிறது என்பது குறித்த ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளைப் பகிர்ந்துள்ளார். குப்பி கூட்டமைப்பின் (Kuppi Collective) பேராதனை பேராசிரியர் ஷாமலா குமார், இலவசக் கல்வி மற்றும் தனியார்மயமாக்கலுக்கான பொதுச் செலவினங்களைக் குறைப்பது ஏன் பிரச்சினையின் ஒரு பகுதியாகும் என்று ஆய்வு செய்தார். சட்டத்தரணி எர்மிசா டெகல், அரசியல் அடக்குமுறை பற்றிய புதிய சட்டங்கள் பற்றியும மற்றும் IMF திட்டத்திற்கு சமர்ப்பிப்பதற்கான சட்டங்களை முன்மொழிந்து குழுக்கலந்துரையாடலை முடிவுக்கு கொண்டுவந்தார். இவ் அமர்வை இலங்கையின் தற்பேதைய காலநிலைச் செயற்பாடின் மெலனி குணதிலக்க மற்றும் இளம் ஆய்வாளர்கள் வலையமைப்பின் யதுர்ஷா உலகேந்திரன் ஆகியோர் நெறிப்படுத்தினர்.

இந்த நிகழ்வின் போது யுக்தி இணையத்தளம் நேரலையில் ஒளிபரப்பப்பட்டு, அதில் இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் கட்டமைப்பு வேர்கள் மற்றும் ட பாரத்தை அதை உருவாக்கிய ஆளும் ஆதிக்கசக்த்திகளை விட அதனால் பாதிக்கப்படும் உழைக்கும் மக்கள் சுமக்க திணிக்கப்படுகிறது என்பது ஆவணப்படுத்தப்பட்டது.


**யுக்தி இணையத்தளம்**

www.yukthisl.org
yukthicollective@gmail.com
+94771888988
03 கின்ஸி டெரஸ், கொழும்பு 00800